செய்தி வெளியீடு எண் : 372 நாள் : 24.02.2023

# செய்தி வெளியீடு

தமிழக அரசின் முன்முயற்சியாக சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் 36 அரசு மற்றும் 147 அரசு நிதி உதவி பெறும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் திறமைகளைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்க மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்திட அரசாணை (ப)எண்.203, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந.8(1)) துறை, நாள்.27.10.2022–ன்படி ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, தமிழகத்தின் 38 மாவட்டங்களும் சென்னை, இராணிப்பேட்டை, தஞ்சாவூர், தட்டப்பாறை (தூத்துக்குடி) என நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் டிசம்பர் 2022 மாதம் நடைபெற்றன.

மண்டல அளவிலான வி ளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல் உள்ளிட்ட தனிநபர் பிரிவு போட்டிகளும் கைப்பந்து, கபடி, பூப்பந்து உள்ளிட்ட குழு விளையாட்டு போட்டிகளும் தனித்தனியே சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கு நடத்தப்பட்டன. மேலும் பேச்சு, பாடல், ஓவியம் மற்றும் நடனம் ஆகிய கலைநிகழ்ச்சிகளும் நடைபெற் றன. சென்னை மண்டல அளவிலான போட்டிகளில் 36 இல்லங்களிலிருந்து 960 குழந் தைகளும், இராணிப்பேட்டை மண்டல அளவிலான போட்டிகளில் 37 இல்லங்களிலிருந்து 700 குழந்தைகளும், தஞ்சாவூர் மண்டல அளவிலான போட்டிகளில் 57 இல்லங்களிலிருந்து 980 குழந்தைகளும், தட்டப்பாறை (தூத்துக்குடி) மண்டல அளவிலான போட்டிகளில் 39 இல்லங்களிலிருந்து 820 குழந்தைகளும் கலந்து கொண்டனர்.

மண்டல அளவிலான போட்டிகளில் பங்கு பெற்று முதல் இரண்டு இடங்களைப்பிடித்த 375 குழந்தை கள் மற்றும் 150 இல்லப் பணியாளர்கள் சென்னை, நேரு வெளி விளையாட்டு அரங்கில் பிப்ரவரி மாதம் 27, 28 ஆகிய தேதிகளில் நடைபெறும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in